மகாப்பிரளயத்தின்போது பிரம்மா மிதக்கவிட்ட அமுதக் கும்பம், கும்பகோணத்தில் வந்து தங்கியது. பின்னர் சிவபெருமான் வேடன் வடிவில் அம்பு எய்து அந்த கும்பத்தை உடைத்ததாகவும், கும்பத்தின் மூக்கு(முனை) உடைந்ததால் இவ்வூர் முதலில் குடமூக்கு என்றும், பின்னர் கும்பகோணம் என்றும் அழைக்கப்பட்டதாகவும் ஐதீகம் கூறுகிறது.

உலகப் புகழ்பெற்ற மகாமகத் திருவிழா 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை கும்பகோணத்தில் நடைபெறுகிறது. இந்த விழாவின் மையத் தலமாக ஆதிகும்பேஸ்வரர் கோயில் விளங்குகிறது. இக்கோயிலின் தாயாரான மங்களாம்பிகை, 51 சக்தி பீடங்களில் ஒன்றான மந்திர பீடத்தின் தெய்வமாக போற்றப்படுகிறார்.

தஞ்சாவூரில் நேற்று வள்ளலார் பணியகம் சார்பில் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கியோர்.

தமிழக அரசுக்கு நன்றி தெரிவித்த வள்ளலார் பணியகம்

■ தஞ்சாவூர்

வடலூர் வள்ளலார் ஞானசபை பெருவெளியில் பன்னாட்டு மையம் கட்டுவதை தமிழக அரசு கைவிட்டது. இதை வரவேற்றும், தமிழக அரசுக்கு நன்றி தெரிவித்தும் தஞ்சாவூர் பழைய பேருந்து நிலையம் முன்பு வள்ளலார் பணியகம் சார்பில் நேற்று பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கும்நிகழ்வுநடைபெற்றது.

இதில், வள்ளலார் பணியகத் தலைவர் சுந்தர்ராஜன், பொருளாளர் தியாகராஜன், மேம்பாலம் சபை சவுந்தர்ராஜன், பட்டுக்கோட்டை மகாலிங்கம், மருத்துவர் சசிவேல் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

தஞ்சாவூர் மாவட்டத்தில்

முன்பட்ட குறுவையில் 2.47 லட்சம் டன் நெல் கொள்முதல்

■ தஞ்சாவூர்

தஞ்சாவூர் மாவட்டத்தில் முன்பட்ட குறுவை சாகுபடியில் 2.47 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் பம்புசெட் மூலம் விவசாயிகள் கோடை பருவத்தில் மேற்கொள்ளும் முன்பட்ட குறுவையில் 40 ஆயிரம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்தனர். இந்த சாகுபடியில்விளைந்தநெல்கடந்த மே மாதம் முதல் அறுவடை செய்யப்பட்டு வந்தது. இதையடுத்து. தஞ்சாவூர் மாவட்டம் முழுவதும் 343 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, மே 14-ம் தேதி முதல் முன்பட்ட குறுவை நெல் கொள்முதல் தொடங்கியது. இதில் 3 லட்சம் டன் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அதன்படி, நேற்று முன்தினம் வரை 2.47 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் ரூ.621 கோடி மின்னணு வங்கிப் பரிவர்த்தனை மூலம் 42,872 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகள் நாள்தோறும் சராசரியாக 2 ஆயிரம் டன் என்ற அளவில் மாவட்டத்தில் உள்ள 46 தனியார் அரைவை ஆலைகளுக்கும், வெளி மாவட்டங்களுக்கும் லாரிகள், ரயில்கள் மூலம் அனுப்பி வைக்கப்படுவதாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக அதிகாரிகள் தெரிவித்தனர்.

தேசிய டெங்கு எதிர்ப்பு விழிப்புணர்வு கூட்டம்

■ காரைக்கால்

காரைக்கால் நலவழித் துறை சார்பில் நிர்மலா ராணி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் டெங்கு விழிப்புணர்வு மாதத்தை முன்னிட்டு மாணவிகளுக்கு டெங்கு காய்ச்சல் விழிப்புணர்வு கூட்டம் நேற்று நடைபெற்றது.

இதில், நலவழித் துறையின் மாவட்ட மலேரியா அதிகாரி தேனாம்பிகை, தொழில்நுட்ப உதவியாளர் சீ.சேகர் ஆகியோர், கொசு மற்றும்பூச்சிகளால்பரவும்டெங்கு நோய் தடுப்பு வழிமுறைகள் குறித்தும், சுற்றுப்புறத்தை எவ்வாறு தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும், டெங்கு காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டவருக்கு எவ்வாறு சிகிச்சை அளிக்க வேண்டும், நோயின் அறிகுறிகள் குறித்தும் விளக்கி பேசினர்.

பள்ளி முதல்வர் அருட்சகோதரி எழிலரசி, சுகாதார ஆய்வாளர்கள் சிவவடிவேல், ஆண்ட்ரூஸ், மரிய ஜோசப் மற்றும் ஆசிரியர்கள், மாணவிகள் கலந்துகொண்டனர்.

TNPL
தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்
காகித நகர், மொண்டிப்பட்டி - 621 306. திருச்சி மாவட்டம், தமிழ்நாடு.
Ph: 04332-261600; Email: tos.u2@tnpl.co.in

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ஒப்பந்தப்புள்ளி எண்.	பணியின் விவரம்	கடைசி நாள்
262723 001842	திருச்சி TNPL அலகு-2ல் சோடா ரிகவரி ஆலையை இயக்குபவர்களை அளித்தல்	14.08.26

பிழை திருத்தங்கள் இருப்பின் அவை NIC இணையதளத்தில் மட்டும் வெளியிடப்படும். மேலும் விபரங்களுக்கு www.tnpl.com / www.tntenders.gov.in/nicgep/app இணையதளங்களை பார்வையிடவும்.

செ.ம.தொ.இ / 2408 / ஒப்பந்தப்புள்ளி/2026

தஞ்சையில் ஆக.3-ல் நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் திமுகவினர் திரளாக பங்கேற்க முடிவு

■ தஞ்சாவூர்

தஞ்சாவூர் மத்திய மாவட்ட திமுக அவசர செயற்குழுக் கூட்டம் தஞ்சாவூர் கலைஞர் அறிவாலயத்தில் நேற்று நடைபெற்றது.

மாவட்ட அவைத் தலைவர் சி.இறைவன் தலைமை வகித்தார். திமுக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், முன்னாள் அமைச்சரும், ஒரத்தநாடு தொகுதி எம்எல்ஏவுமான ஆர்.வைத்திலிங்கம், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் டிகேஜி.நீலமேகம், எம்.ராமச்சந்திரன், கே.டி.மகேஷ்கிருஷ்ணசாமி, து.செல்வம், முன்னாள் எம்எல்ஏ சி.ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்டச் செயலாளரும், எம்எல்ஏவுமான துரை.சந்திரசேகரன் வரவேற்றார்.

கூட்டத்தில், பயிர்க் கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும், டெல்டா மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவிக்க வேண்டும் எனக் கோரியும், மேகேதாட்டு அணை கட்டுவதை தடுக்க தவறிய தவெக அரசைக் கண்டித்தும் திமுக சார்பில் தஞ்சாவூர் பனகல் கட்டிடம் முன்பு ஆக.3-ம் தேதி காலை 10 மணிக்குசட்டப்பேரவைஎதிர்க் கட்சி தலைவரும், திமுக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்ற உள்ளது. இதில் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்துகொண்டு ஆதரவு தெரிவிக்கின்றனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில், ஒன்றியங்கள், நகரங்கள், மாநகரங்கள், பேரூராட்சிகளில் இருந்து விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், திமுக நிர்வாகிகள் திரளாக கலந்துகொள்வது என தீர்மானிக்கப்பட்டது.

மாநகரச் செயலாளர் சண்.ராமநாதன், மாநகராட்சி மேயர்(பொறுப்பு) அஞ்சுகம் பூபதி, மாவட்ட நிர்வாகிகள் எல்.ஜி.அண்ணா, மணிமாறன், கனகவல்லி பாலாஜி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

மேட்டூர் அணை நிலவரம்

நீர்மட்டம்	73.56 அடி
நீர் வரத்து	132கன அடி
நீர் திறப்பு	1,000 கன அடி

கல்லணையில் நீர் திறப்பு இல்லை

வரி விளம்பரங்கள்

சுய செய்தி

பெயர்மாற்றம்

NAME CHANGE
I, PARWATHY w/o RAMASAMY resident of D.No.4/19, Vallalar Street, Arumbavur Post, Veppanthattai Taluk, Perambalur District, Pin 621 103 Shall hence forth be known as
PARVATHI w/o RAMASAMY
PARWATHY w/o RAMASAMY

பொது

பொது அறிவிப்பு

சென்னை எக்மோர் கூடுதல் வணிக நீதிமன்றத்தில் (சிவில் நடைமுறைச் சட்டம், 1908-ன் Order XXXVII Rule 1 & 2 மற்றும் வணிக நீதிமன்றங்கள் சட்டம், 2015-ன் பிரிவு 2(1)(c)-இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட சுருக்க வழக்கு)
C.O.S. எண். 198 / 2026
எம்/ஸ். Fairmacs Shipstores Pvt. Ltd.,
அதன் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி திரு. ஜாபர் அலி மூலம்,
... வாதி
எதிராக
1. Auxus Foodtech LLP @ Bai Veetu Kalyana Biriyani,
அதன் பிரதிநிதி
திரு. பஹீம் சுலைமான்.
2. திரு. பஹீம் சுலைமான்.
3.திருமதி. நாகேந்திரன் ஹனுமா நந்தினி கிருஷ்ணா.
... எதிர்வாதிகள்

செய்தித்தாள் மூலம் வெளியிடப்படும் அறிவிப்பு

பெறுநர் :
Auxus Foodtech LLP @ Bai Veetu Kalyana Biriyani,
அதன் நிர்வாக இயக்குநர் / பங்குதாரர்
திரு. பஹீம் சுலைமான் மூலம், எண். 1/187, தாழம்பூர் சாலை, நாவலூர், காஞ்சிபுரம், சென்னை 603103.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள வாதி, தங்களுக்கு எதிராக **சிவில் நடைமுறைச் சட்டம், 1908-ன் Order XXXVII Rule 1 & 2 மற்றும் வணிக நீதிமன்றங்கள் சட்டம், 2015-ன் பிரிவு 2(1)(c)(i)(xviii)-இன் கீழ்,** கடன் தொகையை வசூலிப்பத்காக மேற்கண்ட வழக்கினைத் தாக்கல் செய்துள்ளார்.

நீதிமன்ற நாசர் (Nazar) மூலமாக தங்களுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டிருந்த போதிலும், வாதியின் கோரிக்கைக்கு பதிலளிப்பதற்காக மாண்புமிகு நீதிமன்றத்தில் நீங்கள் ஆஜராகத் தவறியுள்ளீர்கள்.

எனவே, **05.08.2026 அன்று காலை 10.15 மணிக்கு,** மாண்புமிகு நீதிமன்றத்தில் நீங்கள் நேரில் ஆஜராகி, வாதியின் கோரிக்கைக்கு பதிலளிக்குமாறு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறீர்கள்.

மேற்கண்ட தேதியில் நீங்கள் ஆஜராகத் தவறினால், சட்டத்தின்படி, உங்கள் ஆஜரின்றியே இவ்வழக்கு விசாரிக்கப்பட்டு தகுந்த தீர்ப்பு வழங்கப்படும் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

திரு. அலெய் ப்ராங்க்ஸ் இன்கோ லயோலா
வழக்கறிஞர்
அறை எண். 104, கத்தோலிக்க மையம்,
அர்மேனியன் தெரு,
சென்னை – 600001.

பள்ளி வேன் கவிழ்ந்து 6 மாணவர்கள் காயம்

■ கும்பகோணம்

திருவாரூர் மாவட்டம் வலங்கைமானில் இயங்கி வரும் தனியார் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் பள்ளி முடிந்து நேற்று மாலை பள்ளிக்கு சொந்தமான வேனில் வீட்டுக்கு புறப்பட்டனர். வேன் திருவிடைமருதூர் வட்டம் மேலவிசலூர் சாலையில் சென்றபோது, சாலையோர பள்ளத்தில் எதிர்பாராத விதமாக கவிழ்ந்தது.

இதில், 6 மாணவர்கள் படுகாயம் அடைந்தனர். அவர்களில் 4 பேர் கும்பகோணம் அரசு மருத்துவமனையிலும், 2 பேர் தனியார் மருத்துவமனைகளிலும் சேர்க்கப்பட்டுள்ளனர். இகுறித்து நாச்சியார்கோவில் போலீஸார் விசாரிக்கின்றனர்.

ESAF
ESAF SMALL FINANCE BANK
REGD. OFFICE: ESAF Bhavan, Mannuthy, Thrissur - 680 651, Kerala

தங்கநகை ஏல அறிவிப்பு

ஈஎஸ்ஏஎப் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் உடன் உறுதிசெய்யப்பட்ட தங்க ஆபரணங்கள் மற்றும் கீழே பட்டியலிடப்பட்டுள்ள கிளை/கள் கடன் பெறுபவர்களால் மீட்கப்படாமல், மீண்டும் மீண்டும் நினைவூட்டியும் மற்றும் அறிவிப்புகளை கொடுத்து இருந்தாலும் கூட கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களின்படி ஏலம் விடப்படும் என்று சம்பந்தப்பட்ட அனைவரும் தகவலை தெரிந்துகொள்வதற்காக இதன்மூலம் இந்த அறிவிப்பு வழங்கப்படுகிறது:

ஏலம் விடப்படும் தேதி : 13-08-2026 நேரம் : 2 PM TO 5 PM
நஏலம் விடப்படும் இடம் : இ-ஏலம் மூலம்
விப்புகளை : https://egold.auctiontiger.net
Contact No: 9099013705/6351896640

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை பார்த்து மற்றும் இ-ஏலத்தின் முழு விவரங்களுடன் இ-ஏலத்திற்காக ஏலம் கேட்பவராக பதிவு செய்வதற்கு தயவுசெய்து மேலே கொடுக்கப்பட்டுள்ள தளத்திற்கு வருகைதாருங்கள்

BRANCH NAME & LOAN ACCOUNT NUMBERS
Kanjappally: 75250001826990, **Bhuvanagiri**: 75250004973220, **Batlagundu**: 75250004793318, **Dindigul**: 75250004551535, 4637054, **Sathyamangalam**: 75250004987494, **Ulundurpettai**: 75250004670400, **Gudalur**: 75250001690614, 4624478, 4877991, **Cumbum**: 75250004992154, **Thiruvarur**: 75250005031316.

மொத்த நிலுவைத் தொகையை செலுத்தி ஆபரணங்களை மீட்டெடுக்க ஆர்வமுள்ள வாடிக்கையாளர்கள், சம்பந்தப்பட்ட கிளைகளில் (ஏலம் விடும் தேதிக்கு 2 நாட்களுக்கு முன்பு) அல்லது அதற்கு முன்பு இதை செய்யலாம்.

ஏலத்தில் பங்கேற்க விரும்பும் ஏலம் கேட்பவர்கள் தங்களின் கேஒய்சி (KYC) ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும். பதிவு செய்யப்பட்ட அமைப்பு/நிறுவனத்திற்கு ஜிஎஸ்டி எண் கட்டாயமாகும். ஏலத்தில் பங்கேற்பதற்கு முன்பு ஏலம் கேட்பவர்கள் ரூ. 50,000 மொத்த தொகையை ஈஎம்டி ஆக டெப்பாசிட் செய்ய வேண்டும்.

திருச்சூர்
தேதி: 01/08/2026
கையொப்பம்
அங்கீகரிக்கப்பட்டு கையொப்பமிடுபவர்

ujjivan SMALL FINANCE BANK
பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.
கிளை அலுவலகம்: எண்.75 D, ப்ளாக் எண்.4, சாலை ரோடு, தில்லை நகர், திருச்சி, தமிழ்நாடு-620018

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண். 8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	கடன் நிலுவைத் தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை (EMD)
1631220280000001 & 1631230310000002 / 1.M/s ஸ்ரீ லட்சுமி நரசிம்மர் டிரேடர்ஸ் 2.Mrs.விமலா 3.Mr.தாமோதரன்.C	(I) 23.02.2026 & 20.02.2026 அன்றுள்ளபடி ₹ 63,40,680/- (ரூபாய் அறுபத்து மூன்று லட்சத்து நாற்பதாயிரத்து அறுநூற்று எண்பது மட்டும்) (II) அடையாளூர்வ சுவாதீனம் - 29.04.2026	29.07.2026 அன்றுள்ளபடி ₹ 69,38,045.02 (ரூபாய் அறுபத்து ஒன்பது லட்சத்து முப்பத்து எட்டாயிரத்து நாற்பத்து ஐந்து மற்றும் பைசா இரண்டு மட்டும்)	₹ 62,25,000/- (ரூபாய் அறுபத்து இரண்டு லட்சத்து இருபத்து ஐந்தாயிரம் மட்டும்)	₹ 6,22,500/- (ரூபாய் ஆறு லட்சத்து இருபத்து இரண்டாயிரத்து ஐநூறு மட்டும்)

சொத்து விவரம்: ஐட்டம் எண்.1: கும்பகோணம் பதிவு மாவட்டம், பாபநாசம் சார் பதிவு மாவட்டம் மற்றும் திருக்கருகாவூர் பஞ்சாயத்து எல்லைக்குட்பட்ட பழைய சர்வே எண்.460, புதிய சர்வே எண்.460/1A1C, **மனை எண்.27, ஸ்ரீவாரி நகர், திருக்கருகாவூர் கிராமம், பாபநாசம் தாலுகா, தஞ்சாவூர் மாவட்டம்** என்னும் முகவரியில் கிழக்கு மேற்காக இருபக்கமும் 60 அடி, தெற்கு வடக்காக இருபக்கமும் 30 அடி ஆகமொத்தம் **1800 சதுர அடி நிலம், அதிலுள்ள கட்டிடம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். புதிய சர்வே எண்.460/1A1C1. எல்லைகள்: வடக்கு: கிழக்கு மேற்காக 20 அடி அகல வழிப்பாதை, தெற்கு: மனை எண்.28, கிழக்கு: மெயின் ரோடு, மேற்கு: மனை எண்.26.
ஐட்டம் எண்.2: கும்பகோணம் பதிவு மாவட்டம், பாபநாசம் சார் பதிவு மாவட்டம் மற்றும் திருக்கருகாவூர் பஞ்சாயத்து எல்லைக்குட்பட்ட பழைய சர்வே எண்.460, புதிய சர்வே எண்.460/1A1C, **மனை எண்.28, ஸ்ரீவாரி நகர், திருக்கருகாவூர் கிராமம், பாபநாசம் தாலுகா, தஞ்சாவூர் மாவட்டம்** என்னும் முகவரியில் கிழக்கு மேற்காக இருபக்கமும் 60 அடி, தெற்கு வடக்காக இருபக்கமும் 30 அடி ஆகமொத்தம் **1800 சதுர அடி நிலம், அதிலுள்ள கட்டிடம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். புதிய சர்வே எண்.460/1A1C2. எல்லைகள்: வடக்கு: மனை எண்.27, தெற்கு: மனை எண்.29, கிழக்கு: பாபநாசமிலிருந்து சாலியமங்கலம் செல்லும் ரோடு, மேற்கு: மனை எண்.26.

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 21.08.2026 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி தேதி: 20.08.2026 அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம் 19.08.2026 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி :
Mr.ராம்பிரசாத் - 95009 96689 / Mr.டீஜோ சாஜன் - 78451 92961

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான M/s.C1 India PVT LTD. மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு Mr.பிரபாகரன் Mob.74182 81709) உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை https://www.bankeauctions.com-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். M/s. C1 India PVT LTD, Helpline Number's- 7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.
விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.
i.e., https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com
ஒப்பம்/-
தேதி: 01.08.2026, இடம்: பெங்களூரு
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அமைப்படியில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவையாகவுமான என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு, இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளில்/ மேற்கொள்ள நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தக் குழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

HINDUJA HOUSING FINANCE
இந்துஜா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்
தலைமை அலுவலகம்: 167-169, 2 வது தளம், அண்ணா சாலை, சின்னமலை, சைதாப்பேட்டை, சென்னை - 600015.
கிளை அலுவலகம்: எண்.133 D, MR கட்டிடம், 1 வது தளம், புதிய ரயில் நிலைய சாலை, கும்பகோணம் - 612001.

மின் ஏலம் மற்றும் விற்பனைக்கான பொது அறிவிப்பு (பிற்சேர்க்கை – IV A) (விதி 8(6))

இந்துஜா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (HHF), கார்ப்பரேட் அலுவலகம்: 167-169, 2வது தளம், லிட்டில் மவுண்ட், சைதாப்பேட்டை, சென்னை-600 015 மற்றும் கிளை அலுவலகம்: எண்.133 D, MR கட்டிடம், 1 வது தளம், புதிய ரயில் நிலைய சாலை, கும்பகோணம் 612001.க்கு அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தின் விற்பனை. நிதிச் சொத்துக்களைப் பத்திரப்படுத்துதல் மற்றும் புனரமைத்தல் மற்றும் பாதுகாப்பு வட்டிச் சட்டம், 2002 அமலாக்கத்தின் கீழ் (இனி 'சட்டம்'). அதே சமயம், HHFன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ("AO") பின்வரும் கடன் கணக்குகள்/எதிர்பார்ப்பு எண்களில் சட்டத்தின் U/S 13(2) வெளியிடப்பட்ட அறிவிப்புக்கு இணங்க பின்வரும் சொத்துக்களை உடைமையாக எடுத்துக்கொண்டார். நிலுவைத் தொகையை அடைவதற்கு, **"எங்கே உள்ளதோ போல் மற்றும் எதுவாக இருக்கிறதோ, அப்படியே" மற்றும் "எந்தவித பின்னர் கோரிக்கையும் இல்லாமல்"** விற்கும் உரிமையுடன். www.bankeauctions.com. என்ற இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ள மின்-ஏல தளம் மூலம் கீழே கையொப்பமிடப்பட்டவர்களால் விற்பனை செய்யப்படும்.

மின் ஏல தேதி மற்றும் நேரம்	முன்வைப்பு தொகை செலுத்த கடைசி தேதி	சொத்துக்களை பார்வையிடும் தேதி & நேரம்	ஏல உயர்வு தொகை
10.09.2026 காலை 11.00 முதல் மதியம் 1.00 மணி வரை	28.08.2026 மாலை 5.00 மணி வரை	18.08.2026 - 20.08.2026 காலை 11.00 முதல் மாலை 4.00 மணி வரை	ரூ. 10,000/-

வ. எண்.	கடன்தாரர்(கள்) / இணை கடன்தாரர்(கள்)	கடன் கணக்கு எண் :	கடன்/செலுத்த வேண்டிய மொத்த தொகை	குறைந்தபட்ச விலை	கேட்பு அறிவிப்பு தேதி மற்றும் தொகை	நேரடி சுவாதீனம் தேதி & தொகை	முன்வைப்பு தொகை (EMD)
1.	கடன்தாரர் : திருமதி. கலைசெல்வி. T, இணைக் கடன்தாரர் - 1 திரு. மோகன். M.	TN/KMB/KUKM/A000000610	27.07.2026 தேதியின்படி ரூ.25,45,182/-	ரூ.27,06,000/-	09.07.2025 & அன்றுள்ளபடி ரூ.22,34,042/-	08.10.2025	ரூ.2,70,600/-
		பணம் செலுத்தும் கணக்கு எண் : HHFLTDTNKMBKUKMA610					
	இருவரும் வசிப்பது : எண். 8/163, மேலத்தெரு, நாயக்கர்பெட்டி, பேருந்து நிறுத்தம், நகர்ப்புறம், பாபநாசம், தமிழ்நாடு, இந்தியா - 614203						
	அடமானச் சொத்து/அசையா சொத்துக்களின் விபரங்கள் : தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் பதிவு மாவட்டம், சுவாமிமலை சார்பதிவாளர் மாவட்டம், பாபநாசம் ஊராட்சி ஒன்றியம், பாபநாசம் வட்டம், உமையாள்புரம்-1 கிராமம், தட்டுமால் படுகை பகுதியில் அமைந்துள்ளதும், மொத்தம் 1.03.0 ஹெக்டேர் பரப்பளவைக் கொண்ட நிலத்தில் 0.13.5 ஹெக்டேர் பரப்பளவு கொண்டதுமான, சர்வே எண் 178/3-ல் உள்ள புஞ்சை நிலம் (பட்டா எண் 700) மற்றும் அதற்கான பொதுப் பாதை உரிமைகள் ஆகியவை இதில் அடங்கும். விற்பனைப் பத்திரத்தின்படி இந்நிலத்தின் நான்கு எல்லைகள்: வடக்கு - அரசலாறு ஆற்றங்கரை; தெற்கு - திருமலைராஜன் ஆற்றங்கரை; கிழக்கு - திருமதி. ரேஷியா பேகம் அவர்களுக்குச் சொந்தமான புஞ்சை நிலம்; மேற்கு - திருமதி. எம். அருணா அவர்களுக்குச் சொந்தமான புஞ்சை நிலம். மதிப்பீட்டு அறிக்கையின்படி இந்நிலத்தின் நான்கு எல்லைகள்: வடக்கு - அரசலாறு ஆற்றங்கரை; தெற்கு - திருமலைராஜன் ஆற்றங்கரை; கிழக்கு - திருமதி. ரேஷியா பேகம் அவர்களுக்குச் சொந்தமான புஞ்சை நிலம்; மேற்கு - திருமதி. எம். அருணா அவர்களுக்குச் சொந்தமான நிலம். இச்சொத்து சுவாமிமலை சார்பதிவாளர் மாவட்டம் மற்றும் கும்பகோணம் பதிவு மாவட்ட எல்லைக்குள் அமைந்துள்ளது.					
2.	கடன்தாரர் : திரு. ரமேஷ் குமார். A, இணைக் கடன்தாரர் - 1 திருமதி. கயல்விழி. R.	TN/KMB/KUKM/A000000222	27.07.2026 தேதியின்படி ரூ.14,50,452/-	ரூ.32,54,000/-	11.09.2025 & அன்றுள்ளபடி ரூ.18,44,514/-	25.12.2025	ரூ.3,25,400/-
		பணம் செலுத்தும் கணக்கு எண் : HHFLTDTNKMBKUKMA222					
	இருவரும் வசிப்பது : எண். 171/33, பிரதான சாலை, மணல்மேடு, நாகப்பட்டினம், நகர்ப்புறம், நாகப்பட்டினம், தமிழ்நாடு, இந்தியா - 609202						
	அடமானச் சொத்து/அசையா சொத்துக்களின் விபரங்கள் : நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை பதிவு மாவட்டம் மற்றும் மணல்மேடு தாலுக்கா, பழைய சார்பதிவாளர் அலுவலகம் மணல்மேடு மற்றும் புதிய சார்பதிவாளர் அலுவலகம் மயிலாடுதுறை கூட்டு-2, சின்னஇலுப்பப்பட்டி மெயின் ரோடு. சர்வே எண். ச.எண்.317/2A, 8 சென்ட் நிலத்திற்கான எல்லைகள், தெற்கு - சாலை, வடக்கு - ராமானுஜம்மாள் நஞ்சை, கிழக்கு - கால்வாய், மேற்கு - அண்ணாதுரை நஞ்சை நிலத்தின் வகைப்பாடு. 8 சென்ட் மொத்த பரப்பளவு எல்லைகள்: தெற்கு - சாலை, வடக்கு ராமானுஜம்மாள் நஞ்சை, கிழக்கு - கால்வாய், மேற்கு -அண்ணாதுரை நஞ்சை.					
3.	கடன்தாரர் : திரு சிவசங்கர். S, இணைக் கடன்தாரர் - 1 திரு. சித்தார்த்தன். S, இணைக் கடன்தாரர் - 2 விஜயலட்சுமி. S.	TN/KMB/KUKM/A000000484	27.07.2026 தேதியின்படி ரூ.10,26,702/-	ரூ.18,27,000/-	11.09.25 & அன்றுள்ளபடி ரூ.10,50,692/-	15.12.2025	ரூ.1,82,700/-
		பணம் செலுத்தும் கணக்கு எ